அனுப்புநர்
உறுப்பினர்-செயலர்,
சென்னைப்பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
எண்.1 காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை-8.

பெறுநர்
ஆணையாளர்,
அம்பத்தூர் நகராட்சி,
அம்பத்தூர்,
சென்னை-53.

---

கடித எண்: பி3/27060/2005 நாள்: 20.9.06.

அய்யா,

பொருள்: சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் – திட்டஅனுமதி – நிலஅளவை எண்.170பகுதி, பாடி கிராமம், கதவு எண்.7 முதல் 12வரை பிளாக் எண்.48பகுதி, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், சென்னையில் கூடுதல் தரைதளம் + 2 தளங்கள் கொண்ட 6 குடியிருப்புக் கட்டிடம் – ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை:
1. சிறப்புக் கட்டிடப்பிரிவு எண்.1106/2005, நாள் 7.11.05இல் அந்த பெறப்பட்ட திட்டஅனுமதி விண்ணப்பம்
2. இதே எண் கொண்ட இவ்வலுவலகத்தில் 28.12.05 மற்றும் 22.2.06 நாள்கடிதம்
3. மனுதாரரின் கடித எண். நாள் 27.2.06.
4. இதே எண் கொண்ட இவ்வலுவலகத்தில் 27.4.06 நாள் கடிதம்
5. மனுதாரரின் கடிதம் நாள் 5.5.2006.
6. இதே எண் கொண்ட இவ்வலுவலகத்தில் 15.6.06 நாள் கடிதம்
7. மனுதாரரின் கடிதம் நாள் 30.6.06.
8. இதே எண் கொண்ட இவ்வலுவலகத்தில் 2.8.06 நாள் கடிதம்
9. மனுதாரரின் கடித எண் நாள் 4.9.2006.

***

நில அளவை எண்.170பகுதி, பாடி கிராமம், கதவு எண்.7 முதல் 12 வரை, பிளாக் எண்.48 பகுதி, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், கூடுதல் தரைத்தளம் + 2 தளங்கள் கொண்ட 6 குடியிருப்புகள் உபயோகம் கொண்ட கட்டிடத்தைக் கட்டுவதற்கு பார்வை 1-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம், பார்வை-1ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2. விண்ணப்பதாரர் பார்வை 8 இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு ரசீது எண். 14402 நாள் 4.9.2006 இல் கீழ்க்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்.

| | | |
|---|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | : ரூ. | 2,425/- |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | : ரூ. | 500/- |
| வரன்முறைக் கட்டணம் | : ரூ. | 5,100/- |
| கட்டிடத்திற்காக காப்புறுதிக் கட்டணம் | : ரூ. | 5,000/- |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | ரூ. | 10,000/- |
| மொத்தம் | ரூ. | 23,025/- |

3. உத்தேச திட்டத்திற்குக் கட்டிட அனுமதி வழங்குவதற்கு முன்னால், குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளுக்கான வடிவமைப்புகளுக்கு உரிய அனுமதியை சென்னைக் குடிநீர் வாரியத்திடமிருந்து பெறப்பட்டு இருக்கிறதா என்று உறுதிசெய்து கொள்ளுமாறு உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. மேல்நோக்கு வடிகட்டு கழிவுநீர்த் தொட்டியின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரே மேற்கொள்ளவேண்டும். குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட்ட பின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிட முனைவோரே அதைப் பராமரிக்க வேண்டும்.

5. அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகள் குழுமத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில் அமையாதிருப்பதும், ஒப்பளிக்கப்பட்ட வரைப்படத்திற்கு மீறியதாகவும், வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கு முரணானதாகவும் கருதப்பட்டு அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6. கிணறுகள், மேல் நிலைத்தொட்டிகள் மற்றும் கழிவுநீர்த் தொட்டிகள் சுகாதாரமுறையில் உறுதியாக மூடப்பட்டு கொசுத் தொல்லைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

7. என்.பி /சிறப்புக் கட்டிடம்/ 408/ 2006, நாள் 20.9.2006 இல் என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள்/வரைப்படங்களின் தொகுதிகள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 20.9.2006 லிருந்து 19.9.2009 வரை செல்லுபடியாகும்.

8. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் ஆணையாளர், அம்பத்தூர் நகராட்சியை அணுகவேண்டும். கட்டிட அனுமதி பெற்றப்பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

9. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால், உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கையை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

(signature)

உறுப்பினர்-செயலருக்காக.

25.9.2006

இணைப்பு:

1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்
2. திட்டஅனுமதியின் 2 படிகள்

நகல்: 1. திரு எஸ். நாராயணமூர்த்தி மற்றும் புலர்,
எண். 48/7, சூரியா அப்பார்ட்மெண்ட்,
அண்ணாநகர் விரிவாக்கம், சென்னை-101.

2. உறுப்பினர்,
உரியத்துறை ( Appropriate Authority )
108 உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-34.

3. வருமானவரி ஆணையர்,
168 உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-34.

4. தனையீட்ட அமைப்பாளர்,
அமலாக்க பிரிவு,
செ.பெ.வ.கு., சென்னை-8.